
# இலங்கையின் நிதித் துறையின் உயர் நிறுவனத்தில் இணைந்துகொள்வதற்கு அரிய வாய்ப்பு




ஓட்டுநர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் கருத்திற்கொள்ளப்படுவதற்கு பின்வரும் தேவைப்பாடுகளுடன் கூடிய முக்கியமாக அரசாங்கத் துறையில் பணியாற்றியுள்ள தகைமைபெற்ற அத்துடன் அனுபவமுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து இலங்கை மத்திய வங்கி விண்ணப்பங்களைக் கோருகின்றது.

# ஓட்டுநர் பதவி

## (ஒப்பந்த அடிப்படை)

## 1. பணி/பொறுப்புக்கள்:

- தேசிய போக்குவரத்து ஒழுங்குவிதிகள், வீதி பாதுகாப்பு நியமங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் உள்ளகப் போக்குவரத்து கொள்கைகள் போன்றவற்றை கட்டாயமாகப் பின்பற்றுவதை உறுதிபடுத்தி, இலங்கை மத்திய வங்கியின் வாகனங்களை அனைத்து நேரங்களினும் பாதுகாப்பான, பொறுப்பான மற்றும் தொழில்சார் விதத்தில் இயக்குதல்.
- பயணத்திற்கு முன்னரும் பின்னரும் வாகனங்களை கிரமமாகப் பரிசோதித்தல், எரிபொருள் அளவுகளைக் கண்காணித்தல், உரிய நேரத்தில் பராமரிப்புப் பணிகளை ஒருங்கிணைத்தல், மற்றும் ஒதுக்கப்பட்ட வாகனங்களைத் தூய்மையானதாகவும், வீதியில் செல்வதற்கு தகுதியானதாகவும் அத்துடன் நேர்த்தியான நிலையிலும் பராமரித்தல்.
- இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்கள், மூத்த முகாமைத்துவம், உத்தியோகப்பூர்வ விருந்தினர்கள் போன்றோருக்கும் அதிகாரப்பூர்வமாக அனுமதி வழங்கப்பட்ட பணிகளுக்கும் நம்பகமான மற்றும் நேரந்தவறாத போக்குவரத்து சேவைகளை வழங்கி, எப்போதும் தொழில்சார் மற்றும் மரியாதைக்குரிய சேவையை உறுதிசெய்தல்.
- செம்மையான மற்றும் இற்றைவரையான பதிவுப் புத்தகங்கள் மற்றும் பயணப் பதிவேடுகளைப் பேணி, ஏதேனும் வீதியில் இடம்பெறும் சம்பவங்கள், வாகனக் குறைபாடுகள் அல்லது பராமரிப்புத் தேவைப்பாடுகள் பற்றி தொடர்புபட்ட மேற்பார்வையாளரிடம் அல்லது வாகனத் தொகுதி நிர்வாகியிடம் உடனடியாகத் தெரிவித்தல்.
- அனைத்து நேரங்களிலும், குறிப்பாக, மூத்த அலுவலர்களை ஏற்றிச்செல்லும்போதும் அல்லது முக்கியத்துவம்வாய்ந்த பொருட்களைக் கையாளும் போதும் இலங்கை மத்திய வங்கியின் நிறுவனசார் கொள்கைகள், பாதுகாப்பு நெறிமுறைகள் மற்றும் இரகசியத்தன்மை நியமங்கள் போன்றவற்றை நிலைநாட்ட வேண்டும்.
- மேற்பார்வையாளர்களால் பணிக்கப்பட்டவாறு சிறிய நிர்வாக அல்லது ஏற்பாட்டுப்பணிகளில் உதவுவதன் மூலம் தொழிற்பாடுசார் வினைத்திறனுக்கு ஆதரவளித்து, போக்குவரத்துப் பிரிவு சீராக தொழிற்படுவதற்குப் பங்களித்தல்.

## 2. தேவைப்படும் குறைந்தபட்ச தகைமைகள் மற்றும் அனுபவம்:

### 2.1 கல்வித் தகைமைகள்:

க.பொ.த (சாதாரண தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் 5 திறமைச் சித்திகள்

### 2.2 அனுபவம்:

அரசாங்கத் துறையில் ஓட்டுநராக குறைந்தபட்சம் பத்து (10) ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

### 2.3 வயது:

வயது 2026.06.14 அன்று 45 வருடங்களுக்குக் குறையாமலும் 57 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல்

### 2.4 ஏனைய கட்டாயத் தேவைப்பாடுகள்:

- புதிய வாகன வகுப்பு வகைப்படுத்தலின் கீழ் 'D' பிரிவில் (முன்னைய வாகன வகுப்பு வகைப்படுத்தலின் கீழ் "A" பிரிவு) குறைந்தபட்சம் இருபது (20) ஆண்டுகள் செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமத்தை வைத்திருத்தல் (இது B, B1, C மற்றும் C1 ஆகிய அனைத்து வாகன வகைகளையும் உள்ளடக்கியதாக இருத்தல்)

  **அத்துடன்,**
- உரிமம் இடைநிறுத்தப்படாமல் அல்லது இரத்துசெய்யப்படாது நேர்த்தியாக வாகனம் செலுத்தும் பதிவினைக் கொண்டிருத்தல்; **அத்துடன்**
- அரசாங்க மருத்துவ அலுவலரால் சான்றளிக்கப்பட்ட தெளிந்த கண்பார்வையும் கேட்கும்திறன் உள்ளடங்கலாக வாகனம் ஓட்டுவதற்கான உடல் மற்றும் உளத் தகுதி; **அத்துடன்**
- செல்லுபடியான பொலிஸ் ஓம்படுகைச் சான்றிதழ்

## 3. தொழில்:

மூன்று (03) ஆண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதிக்காக ஒப்பந்த அடிப்படையிலானது. ஒப்பந்தங்கள் தொடக்கத்தில் ஒரு (01) ஆண்டுக்காக கைச்சாத்திடப்பட்டு வங்கியின் தேவைப்பாடுகள் மற்றும் செயலாற்றம் என்பவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் புதுப்பிக்கப்படும். ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புசெய்யப்படும் அலுவலர்கள் இலங்கை மத்திய வங்கியின் நிரந்தரப் பதவியணியில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்.

## 4. ஊதியம் மற்றும் ஏனைய நன்மைகள்:

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பற்றுக்கான பங்களிப்புக்களுடன் ரூ. 100,000.00 கொண்ட அனைத்தையுமுள்ளடக்கிய வரி விதிக்கத்தக்க மாதாந்த கொடுப்பனவு.

## தெரிவுசெய்யப்படும் முறை

ஓட்டுநர் தேர்ச்சி பரீட்சையின் மற்றும் ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நேர்முகப் பரீட்சைகளின் அடிப்படையில் பொருத்தமான அபேட்சகர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

## விண்ணப்பங்கள்

விண்ணப்படிவங்கள் https://www.cbsl.gov.lk/en/careers என்ற இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகப்பூர்வ இணையத்தளத்தில் தரவிறக்கம் செய்யப்படலாம்.

குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினையே பயன்படுத்துமாறு விண்ணப்பதாரிகள் கட்டாயமாக அறிவுறுத்தப்படுகின்றனர் என்பதுடன் உரியவாறு பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை வேண்டப்பட்ட அனைத்து ஆவணங்களுடனும் 2026.06.14 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பதிவுத் தபால் மூலம் மனித வளங்கள்/பணிப்பாளருக்கு கிடைக்கும் விதத்தில் பின்வரும் முகவரிக்கு அனுப்புமாறும் வேண்டப்படுகின்றனர்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஓட்டுநர் (ஒப்பந்த அடிப்படை) பதவிக்கான விண்ணப்பம்" எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

முடிவுத் திகதியன்று உள்ளவாறு வேண்டப்பட்ட தகைமைகளை மற்றும் அனுபவத்தைக் கொண்டிராதவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க தகைமைபெறமாட்டர். தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்யாத, முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற அல்லது குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பிக்கப்படாத எந்தவொரு விண்ணப்பமும் எந்தவொரு அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

நேர்முகப் பரீட்சைக்கு முன்னர் தொடர்புடைய ஆவணங்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற அபேட்சகர்கள் எக்காரணத்தின் கீழும் தகைமையுடைய அபேட்சகர்கள் இப்பதவிக்கு நியமிக்கப்படமாட்டர்.

எந்தவிதத்திலேனும் ஆதரவு தேடுதல் தகைமையிழக்கச் செய்யும்.

ஆட்சேர்ப்பினைப் பிற்போடுவதற்கான, இரத்துச் செய்வதற்கான உரிமையை இலங்கை மத்திய வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது. தெரிவு அட்டவணைப்படுத்தப்பட்ட அபேட்சகர்கள் மாத்திரம் ஆட்சேர்ப்பின் அடுத்த கட்டத்திற்கு தொடர்புகொள்ளப்படுவர்.

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 20 மற்றும் 24(1) பிரிவுகள் தெரிவுசெய்யப்படும் அனைத்து அபேட்சர்களுக்கும் ஏற்புடையதாகும்.

**பணிப்பாளர் – மனித வளங்கள் திணைக்களம்**
இலங்கை மத்திய வங்கி, இல. 30 சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி : 011-2477330, தொலைநகல் : 011-2477715